**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Nature and Philosophical thoughts in Tamil Haiku Poems

**B.Shiny**, Assistant Professor of Tamil, Wavoo Wajeeha Women's College, Kayalpatnam.
**ORCiD: https://orcid.org/0000-0002-6875-7877**
**DOI: 10.5281/zenodo.6623148**

## Abstract

*Haiku poetry is a genre from Japanese literature. Initially, the main subject of Haiku poetry was Zen philosophy. The poem was created in Japan and China where religious Buddhism is prevalent. More natural haiku content is also found in western literature. Philosophy with natural thoughts as a subject is nothing new to Tamil Literature. It has been studied since the Sangam literary period. Natural philosophical ideas can also be found in the contemporary literary genre of haiku poetry in Tamil. 'Haiku Aayiram' is a collection of poems that is thought-provoking with multifaceted insights full of nature and philosophical ideas. This article not only beautifully describes the nature of nature but also refers to the Philosophy of life that is in Tamil Haiku Poems.*

**Keywords:** Natural, Philosophical, Thoughts, Tamil Haiku Poems, *Tamil Haikoo Aayiram*.
.

## References

[1] Ra.Mohan (Editor). *Tamil Haikoo Aayiram.* Sahithya Academy, New Delhi.
[2] Manikanar (Translator). *Puranaanuru Moolamum Uraium*. Varthamaanar Publication, Chennai.
[3] *Bharathithasan Kavithaikal*. Paari Nilayam, Chennai.
[4] Saami Sithamparanar (Translator). *Naaladiyar*. Vasantha Publication, Chennai.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தமிழ் ஹைக்கூ கவிதைகளில் இயற்கைத் தத்துவச் சிந்தனைகள்

**பெ.ஷைனி**, உதவிப்பேராசியை, தமிழ்த்துறை,

வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காயல்பட்டணம்.

OR ORCiD: https://orcid.org/0000-0002-6875-7877

DOI: 10.5281/zenodo.6623148

**ஆய்வுச்சுருக்கம்**

*ஹைக்கூ கவிதை ஜப்பான் இலக்கிய வகையாகும். தொடக்கத்தில் ஹைக்கூக் கவிதையின் முக்கியபொருள் ஜென்தத்துவமாகும். ஜப்பான் மற்றும் சீனாவில் இக்கவிதை தோற்றம் பெற்றதால் அங்குள்ள மதமான பௌத்த நெறிகள் கவிதையில் அதிகம் காணப்படுகிறது. மேலும் இயற்கைரசனை பாடல்களும் மேற்கத்திய ஹைக்கூவில் அதிதமாய் காணப்படுகிறது. இயற்கைச் சிந்தனைகளை பாடுபொருளாய் கொண்டு தத்துவத்தை பாடுவது தமிழ் இலக்கியதிற்கு ஒன்றும் புதிதல்ல. சங்கஇலக்கிய காலம் தொட்டே இது பயின்று வருகிறது. தற்கால இலக்கிய வகைமையான ஹைக்கூகவிதையிலும் இயற்கை தத்துவச்சிந்தனைகள் வெளிப்பட்டு நிற்பதை காணமுடிகிறது. தமிழ் ஹைக்கூ ஆயிரம் என்ற கவிதைத் தொகுப்பானது பன்முகப்பொருளுடன் சிந்திக்கத்தூண்டும் கவிதையாகும். இயற்கையின் தன்மையை அழகாய் வருணிப்பது மட்டுமின்றி அதனோடு வாழ்வியலையும் பொருத்தி சிந்திக்கவைப்பதாய் இந்நூல் அமைகிறது இயற்கைவாயிலாய் உணர்த்தப்படும் வாழ்வியல் தத்துவத்தை இக்கட்டுரை குறிப்பிடுகிறது.*

**முக்கியச்சொற்கள்:** இயற்கை சிந்தனைகள், தத்துவம், கற்பனை

**முன்னுரை**

இலக்கியப் படைப்பியலில் முக்கியமானது அதன் பொருண்மை. பொருண்மை என்பது காலந்தோறும் புதுமுகத் தன்மையோடு மாற்றம் பெறக்கூடியனவாக திகழ்கிறது. ஆனால் மாற்றம் பெறாதவையாய் கற்பனையுடனும் அழகுடனும் ரசனைத்தன்மையுடன் விளங்குவது இயற்கையும் அது சார்ந்த புனைவியலும் ஆகும். இயற்கை புனைவியலில் உலகச் சிந்தனைகளை புகுத்துவது சங்க இலக்கியந் தொட்டே இருந்து வருகிறது. காலந்தோறும் வளரும் விருந்தெனக் கொள்ளும் புத்திலக்கியங்களிலும் இயற்கை புனைவுகளில் புது புது சிந்தனைகள் முளைக்கிறது. அவ்வகையில் ஹைக்கூ கவிதைகளில் உருப்பெற்ற இயற்கையும் அத்துடன் ஒப்புமையாய் நோக்கப்படும் தத்தவச் சிந்தனைகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**ஹைக்கூ கவிதை உருவாக்கமும் வரலாறும்**

17ம் நூற்றாண்டில் ஜப்பானில் எடோ என்ற மன்னன் காலத்தில் தான்ஹைக்கூக் கவிதை உருப்பெற்றது. பாசோ என்ற ஜப்பானிய கவிஞர் இக்கவிதை உருவாகக் காரணமாகத் திகழ்ந்தார். 5, 7, 5 என்ற அசை அமைப்பில் மூன்று அடிகளையுடையது ஹைக்கூ.ஆரம்ப காலத்தில் ஹொக்கு என்றழைக்கபட்டது .காலப்போக்கில் ஹைக்கூ என திரிபுற்றது. ஹைக்கூ என்பதற்கு அணுத்தூசி என்பது பொருள். ஜப்பானை அடுத்து சீனாவிலும் இவ்விலக்கிய வகைமை ஆழமாய் காலூன்றியது. ஹைக்கூ கவிதையின் தொடக்க கால பொருண்மை ஜென் தத்துவமாகும். இயற்கையும் தத்துவச்

சிந்தனையும் அதன் கருவாக வளர்நிலையில் மாற்றம் பெற்றது. தமிழில் ஹைக்கூக் கவிதையானது 1980களில் தோற்றம் பெற்றது. அமுதபாரதி, தமிழன்பன், அறிவுமதி, கழனியூரன், துறவி ஆகியோர் ஹைக்கூ கவிதையின் தொடக்க காலத்தில் தமிழில் சிறந்து விளங்கியவர்கள் ஆவர். தமிழில் ஹைக்கூ கவிதையானது துளிப்பா, மினிப்பா, கடுகுகவிதை, மின்மினிகவிதை, வாமனகவிதை என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

**தமிழ்ஹைக்கூ ஆயிரம் நூல் அறிமுகம்**

முனைவர் இரா. மோகன் தொகுத்த ஹைக்கூ கவிதை நூலே தமிழ் ஹைக்கூ ஆயிரம் என்பதாகும். 2014ல் இந்நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது. நூறு ஹைக்கூ படைப்பாளர்களின் படைப்புகளைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு கவிஞருக்கும் பத்து சிறந்த கவிதைகளைத் தொகுத்து வழங்கியிருக்கிறார்

**இயற்கை இசைவுகளும் ஒப்பீடும்**

உலகத் தன்மைகளில் மாற்றம் பெறாதவையாய் இருப்பது இயற்கைகளின் இயைந்த தன்மையே. இத்தன்மை இல்லையெனின் பூமி இயங்காது. இயற்கை அதனதன் தன்மையில் இயங்குவதாலேயே இப்பூதலத்தில் உயிர்வாழ்க்கை சாத்தியமாகிறது.

**“மண் திணிந்த நிலனும்**
**நிலனெந்திய விசும்பும்”[1] (புறநானூறு. பா. 2 )**

எனக் குறிப்பிடுகிறது புறநானூறு. இயற்கை இறைவனின் ஆச்சர்ய படைப்பாக்கம். நாள் சுழற்சியும், பருவ கால மாற்றங்களும், மலைகளும், காடுகளும் விலங்குகளும், மனிதர்ளும் அவ்வவற்றின் இயக்கங்களும் வியக்கத் தக்க வகையில் அமைந்துள்ளன. ஒவ்வொன்றின் வளர்ச்சி நிலைகளிலும் ஒவ்வொரு உயிர்க்கும் தனித் தன்மை உண்டு. உதாரணமாக பயிர்முற்றின் அப்பயிரானது தலை கவிழ்ந்த தன்மையாய் இருக்கும் .இத்தன்மையினை வாழ்வியலோடு,

**“எல்லோருக்கும் உணவு**
**கிடைக்காத வருத்தமா**
**குனிந்தபடி நெற்கதிர்” (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 55)**

என்று குறிப்பிடுகிறது ஹைக்கூ. இயற்கைத் தன்மையை வறுமையோடு ஒப்பிடுவதை இக்கவிதை வழி அறிய முடிகிறது.

**கற்பனையும் தத்துவமும்**

கவிதை புனைவுகளில் கற்பனை இன்றியமையாததாகிறது. கற்பனையோடு கலந்த இயற்கை கவிதைகள் கவின் பெறும் வனப்பாக திகழ்கிறது.கற்பனையின் ஊடே இலைமறைகாயாக இருண்மையாய் தத்துவங்கள் வெளிப்படுகிறது. வீட்டில் வளர்க்கப்படும் செடிகள் பாதுகாப்பில் தண்ணீர் ஊற்றி வளர்த்தாலும் அதன் தன்மை சில நேரங்களில் பிழைபடலாம். ஆனால் பராமரிப்பில்லாத காட்டுச் செடிகள் அக்கறையில்லாமலே பூத்தும் காய்த்தும் அதன் தன்மைகளை வெளிப்படுத்துகிறது. இத்தகு இயற்கை தன்மையை,

**“தொட்டிக்கு நீருற்றுகையில்**
**கேலியாய் சிரிக்கின்றன**
**வேலி பூக்கள்” (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 36)**

என்ற ஹைக்கூவினை உற்று நோக்கும் போது அடைபட்ட நிலைகளில் குறிப்பிட்ட நெறிகளில் வளர்க்கப்பட்டாலும் சிலர்வழி தவறி விடுகின்றனர். ஆனால் சுதந்திரமாய் கட்டுபாடில்லாது வளரும் சிலர் நன்னெறியில் செயல்படுகின்றனர் அத்தகு கருத்தை வேலிப் பூக்களாய் கற்பனையோடு தனிமனித வளர்ப்பு நிலைகளாய் அழகாய் பொருத்துகிறது இக்கவிதை.

**நிலவும் வாழ்க்கையும்**

கவிஞர்களுக்கு கவித் தீனி போடும் ஓர் அற்புத படைப்பு நிலா. நிலவினை ரசிக்காத கவிஞர்கள் இல்லை எனலாம். நிலாவை ரசிக்காத கண்கள் இல்லை. குழவி முதல் பெரியோர்வரை அனைவருமே நிலாவின் ரசனையாளர்களே. பாரதிதாசன் நிலவை,

**"நீல வான் ஆடைக்குள் உடல் மறைத்து**
**நிலவென்று காட்டுகின்றாய்**
**ஒளிமுகத்தை " (பாரதிதாசன் கவிதைகள், ப. 20)**

என வருணிக்கிறார். நிலவின் தன்மையே தேய்தலும் வளர்தலும் ஆகும். பிறை நிலவாய் வளர்ந்து முழு நிலவாகி பின் தேய்ந்து அமாவாசையாகி தொடர்ச்சியாக சுழற்சியாய் நடைபெறும் இந்நிகழ்வினை அடியொற்றி,

**"தேய்ந்து வளந்து**
**வளர்ந்து தேய்கிறது.**
**வாழ்க்கை '' (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 47)**

என்று வாழ்வியலோடு ஒப்புமைப்படுத்திக் கூறுகிறது இக்கவிதை. வாழ்க்கையானது இன்பமும் துன்பமும் கலந்தது. வாழ்வில் முன்னேற்றம் மட்டுமே பெற்றவர் எவரும் இல்லை. துன்பம் மட்டுமே பெற்ற வரும் எவரும் இல்லை. ஆதலால் நிலவின் தன்மை அழகாய் வாழ்க்கைக்கும் பொருந்துகிறது. மேலும், நிலவினை பெரும்பான்மையும் பெண்ணின் அழகிற்கு ஒப்புமையாய் கூறுவர் . ஆனால், பெண்ணிண் வாழ்வியலோடு,

**"தாய் வீட்டில் வளர்ந்தாள்**
**புகுந்த வீட்டில் தேய்கிறாள்**
**நிலவுதான் பெண்" (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 54)**

என அழகாய் இவ்வியல்பினை ஒப்பீட்டு கூறுகிறார் கவிஞர் ஆடலரசன். அழகியலைத் தாண்டி மாற்றுக் கருத்தினை முன் வைக்கிறது நிலவிற்கான ஒப்புமை.

**ஞாலமும் அதனியல்புகளும்**

உலகமானது உயிர் வாழ்க்கைக்கான வாழ்வாதாரங்களை தந்து இயங்கி வருகிறது. உயிர் இயக்கத்திற்கான ஆக்க்க்கூறுகள் இயற்கையிலேயே அமைந்தனவாய் விளங்குகிறது. பூமியானது சுழல்வதாலேயே உயிர்வாழ்க்கை சாத்தியமாகிறது. **"சுற்றுகிறது பூமி இன்னும் நல்லோரைத் தேடி" (தமிழ்ஹைக்கூஆயிரம் – ப103)** பூமியானது சமச்சீரான அமைப்பில் சமதளமாய் இருப்பதில்லை. நீர்நிலைகளும் உயர்ந்த மலைகளும் தாழ்ந்த பள்ளத்தாக்குகளும் நிறைந்தவை. அத்தகு தன்மையினை,

**"இயற்கையிலேயே இங்கு**
**மேடு பள்ளம்**
**இமயம்முதல் குமரிவரை" (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 27)**

என்று குறிப்பிட்டு இயற்கையிலேயே என அழுத்தம் கொடுத்து கூறுவதன் மூலம் இயற்கையில் உள்ள மேடு பள்ளங்கள் இருந்தும் இன்னும் மேடு பள்ளங்கள் மொழிகளாக, இனங்களாக, நிறங்களாக நிரம்பி நிற்கிறது நாடு முழுதும் என்பது தெளிவாகிறது. இந்நிலவுலகில் அடிப்படைத் தேவைகள் மண் சார்ந்தவையாக உள்ளன. உணவு, நீர் கூட அதனால் தான் சாத்தியமாகிறது.தொழில் நுட்ப கால பரிணாமத்தில் மக்கள்தொகை பெருக்கத்தில் நிலங்கள் கட்டடங்களாக உருப்பெருகிறது. இதனை,

**“நெல் விளைகிற புமி**
**கல்லு விளஞ்சிருக்கு**
**ரியல் எஸ்டேட்” (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 81)**

என்ற ஹைக்கூ கவிதை நிருபிக்கிறது. கட்டடங்களாய் காலம் தோறும் விளைநிலங்கள் உருமாறினால் உணவுத் தேவையும் பூர்த்தியும் கேள்விக்குறியாகும்.

**காலம் உணர்த்தும் நெறிகள்**

காலமென்பது கடந்து செல்லக் கூடியது. யாருக்காகவும் எதற்காகவும் எந்நிலையிலும் காலம் ஒரு நொடி பொழுது கூட நிற்காது. கடந்த பாதையை ஒரு போதும் மாற்ற இயலாது.

**“தினமும் இறக்கும்**
**மறுபடியும் பிறக்கும்**
**காலண்டர்” (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 102)**

என்ற ஹைக்கூவின் வழி இறந்தும் மறுநாள் பிறக்கும் நாட்காட்டி போல வாழ்வில் கடந்த காலங்களை மறந்து புதிதாய் நாளைத் தொடங் வேண்டுமென்பதை அறிய முடிகிறது.

**கடலலையும் மனித மனமும்**

கடல் அலையானது ஆர்பரிக்கும் தன்மையுடையது. ஆரவாரத் தன்மைக்கும் மனசலனத் தன்மைக்கும் ஒப்புமையாய் கூறுவர். அலையானது போவதும் வருவதுமாய் தொடர்ந்து ஆரவாரிக்கும். இதனை,

**“திரும்பத் திரும்பத் தீண்டும்**
**அடங்கா ஆசை**
**அலைகளுக்கு” (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 66)**

என அடங்காத ஆசையுடையதாய் வருணிக்கிறார்இளங்கம்பன். மனித மனமும் பலமுறை அடிபட்ட பின்பும் அலைகளை போல் அடங்காத ஆசையுடையதாய் திகழ்வதெனக் கொள்ளலாம்.

**பருந்துப்பார்வை**

நுண்ணிய ஆய்ந்த பார்வைத்திறனை குறிப்பிடும் போது பருந்துப் பார்வையெனக் குறிப்பிடுவர். பருந்தானது எவ்வளவு உயரம் இருந்தாலும் அதனின் பார்வை தாழ்நிலை வரை உற்றுநோக்கும். அத்தகுத்திறனை அடியொற்றியே,

**“சிறகுகள் என்னவோ ஆகாயத்தில்**
**பார்வையோ குப்பை மேட்டில்**
**உயரத்தில் பறக்கும் பருந்து ” (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 35)**

என்ற ஹைக்கூவை குறிப்பிடுகிறார் துறவி. ஆனால் அதன் பொருண்மையோ வித்யாசப்படுகிறது. சிறகுகள் விரித்து ஆகாயத்தில் பறந்தாலும் பருந்தின் பார்வை எப்படி கீழே இருக்கிறது போலவே சில

மனிதர்களிடத்தில் உள்ள சில கீழான குணங்கள் மேலானவராய் அவர் இருந்தாலும் கீழ் தன்மையால் அவரின் மதிப்பு குறைபாடுடையதாய் ஆக்கி விடுகிறது.

**மலர்களும் வாழ்வியல் அழகும்**

பூக்கள் மகிழ்வின் அடையாளமாகத் திகழ்கிறது. பூக்களை சூடுதல் சந்தோஷத்தின் வெளிப்பாடாகவும் அழகுபடுத்தலின் முக்கிய காரணியாகவும் திகழ்கிறது. இலக்கியங்களில் திணைசார் பகுப்பு முறைகளில் பூக்கள் முக்கிய இடம் வகிக்கிறது. சங்க காலத்தில் பூக்களில்லாத ஒப்பனை எனபதில்லை. துன்ப காலங்களில் சோக நிகழ்வுகளில் மக்கள் பூ சுடுவதில்லை. “இளையோர்சூடார்வளையோர்கொய்யார்” (புறநானூறு. பா. 242) என்ற புறநானூற்று பாடல்வழி அறிய முடிகறது. அலர்ந்த பூக்களினை பார்க்கும் போது ஏதோ ஓர்மகிழ்வு உண்டாகிறது. வாழ்வில் எத்தகு பிரச்சனைகளை எதி கொண்டிருப்பினும் அதனையே எண்ணி சோகமயமாய் வாழ்வை கடத்துதலைக் காட்டிலும் பூக்களை போன்று மகிழ்வாய் இருக்க வேண்டுமென்பதை,

**“சுற்றிலும் முட்கள்**
**சிரிப்பதை நிறுத்தவில்லையே பூ” (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 55)**

என்ற ஹைக்கூ உணர்த்துகிறது. புக்களின் இயற்கைத் தன்மையோடு வாழ்வியலை இயல்பானத் தன்மையோடு நகர்தல் இனிமையான நகர்வாய் அமையும். கழிந்ததை எண்ணுதல் கவலையை மட்டுமே அதிகரிக்கும்.

**அஃறிணை தன்மையும் மனித தன்மையும்**

மனிதன் ஆறறிவினை உடையவன். மனிதனின் நற்பண்புகளே அவனை அஃறிணை உயிர்களிடத்திலிருந்து பிரித்துக் காட்டுகிறது. ஆனால் மனிதன் மனிதம் இழந்தே தற்காலத்தில் செயல்படுகிறான். ஒழுக்க நெறிமுறைகளென்பது மனத்திலிருந்து முகிழ்த்தெழ வேண்டும். அமைதி சமாதானமான சுழலென்பது இக்காலத்தில் சாத்தியமில்லா ஒன்றாகவே திகழ்கிறது.

**“அமைதியாய் ஆர்பாட்டமின்றி**
**முடிந்தது பேரணி**
**எறும்புகளின் ஊர்வலம் ” (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 101)**

என்ற ஹைக்கூவின்வழி அஃறிணை உயிர்களிடத்து கூட நெறிமுறை உண்டு. ஆனால் மனிதன் தனக்கான நெறியை மறந்து விடுகிறான் என்பதை அறிய முடிகிறது.

**நிலையாமை**

இவ்வுலக வாழ்க்கையில் எதுவும் நிரந்தரம் இல்லை. இளமை கடந்து போகக்கூடியது. பிணியும் போகக்கூடியது . செல்வம்கூட நிலைத்து நில்லாதது. இதனையே நாலடியரும் "சகடக்கால் போலவரும்"(நாலடியார், பா. 2) எனக் குறிப்பிடுகிறது. வாழ்க்கையை எண்ணி திட்டமிட்டு வாழமுடியாது. அவரவர் குணங்கள் தன்மைகளை மறைத்து போலியாய் வாழ்தல் என்பது சில காலமே சாத்தியப்படும். இளமையின் பின்முதுமை எவ்வாறு வருமோ அவ்வாறே கண்டிப்பாக உண்மைத்தன்மை ஒருநாள் வெளிப்படும். முதுமையில் தலை நரைப்பதை,

**"நாட்படநாட்பட**
**சாயம்வெளுக்கும்**
**மயிர்கம்பிகள் (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 24)**

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

என்று கூறி நரைப்பதை போன்றே எல்லோரின் குணமும் ஒருநாள் வெளிப்படும் என்பதை அறியமுடிகிறது.

**அரசியலும் தத்துவமும்**

மக்களிடத்தும் சமூகத்தினிடத்தும் நன்மைகளை கொண்டு வருவதே நல்ல ஆளுமை. ஆளுமையை சார்ந்தே மக்களும் இயங்குகின்றனர். மன்னன் சிறந்த தன்மையுடன் திகழ வேண்டும். கொள்கைளில் உறுதி தன்மை வேண்டும். வாக்குறுதிகளை கொள்கைகளை முறையாக செயல்படுத்தல் என்பது தற்கால அரசியலில் விமர்சனத்திற்குரியதாகிறது. தற்காலத்தைய அரசியல் கொள்கைகள் சில கானல் நீராகவே திகழ்கிறது. கொள்கைகள் மேம்போக்காகவே இருக்கின்றது என்பதனை,

**“எண்ணெயும் நீரும்**
**ஒட்டியும் ஒட்டாமலும்**
**அரசியலும் கொள்கைகளும்” (தமிழ் ஹைக்கூ ஆயிரம் – ப. 77)**

என்ற கவிதை அழகாய் எடுத்துரைக்கிறது.

**முடிவுரை**

தமிழ் ஹைக்கூ ஆயிரம் என்ற கவிதைத் தொகுப்பானது பல அறிஞர்களின் அறிவு களஞ்சியமாகத் திகழ்கிறது. தமிழ் ஹைக்கூ கவிதைகளை பொறுத்தவரை இயற்கை கருத்துகள் கற்பனை புனைவுகளே பெரும்பான்மையும் பாடுபொருளாய் அமைகிறது. ஹைக்கூ கவிதையானது கடினத் தன்மையுடையதாய் உள்ளது. கவிதையினை மீண்டும் மீண்டும் படிக்கும் போது தான் அதன் உட்பொருள் விளங்கும். ஹைக்கூ கவிதைகள் மற்ற மொழியினும் தமிழில் குறைவு. மேலும் கவிதைகளும் பெரும்பாலும் ஒரே மாதிரியான சாயலிலே திகழ்கிறது. ஹைக்கூவில் கூறப்பட்ட தத்துவங்கள் இயற்கையோடு புனையப்பட்டு சிந்தனை தூண்டுவதாக அமைவதை கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

[1] இரா.மோகன் (தொகுப்பாசிரியர்). தமிழ் ஹைக்கூ ஆயிரம். சாகித்திய அகாதெமி, புதுதில்லி.
[2] மாணிக்கனார் (உரையசிரியர்). புறநானூறு மூலமும் உரையும். வர்த்தமானர் பதிப்பகம், சென்னை.
[3] *பாரதிதாசன் கவிதைகள்*, பாரி நிலையம், சென்னை.
[4] சாமிசிதம்பரனார் (உரையசிரியர்). நாலடியார். வசந்தா பதிப்பகம், சென்னை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.